May, 2, 2014

# சமூகம் நம்மைக் காக்கும் தாய்

உடலுக்குத் தாய் பெற்றவள் , ஊரைப் பெற்றெடுத்த தாய் சமூகம் . சமூகம் மனிதனுக்கு பாட்டி , தாயைப் பெற்றெடுத்த பெரிய தாய். மூச்சு இடைவிடாமல் உயிரைக் காப்பது போல் சமூகம் இடைவிடாது நம்மைக் காப்பாற்றி, உயிரளித்து, உற்சாகமூட்டுவதை நாம் கண்டு கொள்வதில்லை. கடையில் போய் ஒரு பொருள் வாங்கும்பொழுது — பழம் , பேனா, நாற்காலி, புத்தகம் — சமூகம் இதைத் தயாரித்து வினியோகம் செய்வதை நாம் நினைவு கூர்வதில்லை. போலீஸ் ஸ்டேஷனில்லாவிட்டால் ரோட்டில் நடக்க முடியாது. கேரளாவில் சூரியன் மறைந்தபின் பெண்கள் வெளியே வருதில்லை . குழந்தைகளைத் தனியே அனுப்பமாட்டோம். ஹர்த்தால் அன்று இது சற்று அதிகமாகப் புரியும் . ஹர்த்தாலில் போலீஸ் சற்று ஒதுங்கியிருப்பதால், அவரவர் தம் எதிரிகளைத் தாக்கும் சந்தர்ப்பமாக அதைக் கொள்வதும் உண்டு.எவரும் அடுத்த வீட்டில் நுழைந்து பொருள்களை எடுத்துப் போகவில்லை என்பது மக்களுடைய நாகரீகமான கட்டுப்பாடு என்று கூறுவதை விட சட்டம் போலீஸ் தடி மூலம் அமுலாகும் என்பதால் என அறியலாம் , எரியும் வீட்டில் பிடுங்கிய வரை இலாபம் என்று இன்று வரை நடைமுறையில் காண்கிறோம் . ஒருவன் ஏமாந்தவனானால், 1) அவன் அழ அழ மற்றவர் வெறியேற்றுவர் , 2) அவன் பொருள்களைப் பறித்துக் கொள்வார்கள், 3) அசகாய சூரர்கள் அவனிடம் எதைப் பெற்றாலும் ஏமாற்றலாம் எனக் கருதி அவனைப் பல பொருள்களையும் கேட்டு , வாங்கி, “ஏமாத்தி விட்டேன், திரும்பி வாங்கி விடுவாயா ?” என சவால் விடும் சமூகம் இது . உள்ளதைக் காப்பாற்ற முடியாத மனிதனை ஊரின் அநியாயத்திலிருந்து சமூகம் காப்பாற்றும். படிக்க வசதியற்றவனுக்கு படிக்க எல்லா வசதிகளையும் தருகிறது . திருமணத்திற்கு தகுதியில்லாதவர்க்கு திருமணம் செய்து வாழ்நாள் முழுவதும் வாழ்க்கைத் துணையை வழங்குகிறது . பெற்றவர் பராமுகமானால், கொடுமை செய்தால், அதனால் பையன் ஓடிப் பிழைக்க முயன்றால், சமூகம் அவனை கோடீஸ்வரனாக்குகிறது. பிள்ளைகள் வயதான காலத்தில் பெற்றோரைக் காப்பாற்றாவிட்டால் , அவர்கட்கு பென்ஷன் தந்து, முதியோர் இல்லத்தில் பாதுகாக்கிறது. வீடு கட்ட நினைக்க முடியாதவர்க்கு வீடு கட்டிக் கொடுக்கிறது. சம்பாதிக்க முடியாதவனுக்கு கடன் உதவி, முதல் தேவைப்பட்டால், சம்பாதித்து சேமித்து வைத்தவன் முதலை பாங்க் மூலம் வாங்கித் தருகிறது . அறிவேயில்லாத ஆயிரம் பேருக்கு அறிவிற் சிறந்த மேதைகள் உருவாக்கிய பொருள்களை அனுபவிக்கும் வகையில் உற்பத்தி செய்து தருகிறது. கரணம் தப்பினால் மரணம் என்று — நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை எனும் பெருமையுள்ள உலகில் — அமைந்த வாழ்வில் பெரும்பாலும் மரணத்திலிருந்து காப்பாற்ற வழி செய்கிறது மரணத்தால் அழிந்தவன் குடும்பம் வாழ இன்ஷூரன்ஸ் ஏற்பாடுண்டு . உள்ளூரை விட்டு B.A., பாஸ் செய்யும் வரை ரயில் பிரயாணம் செய்யாதவருக்கு பிள்ளைகளை அமெரிக்கா அனுப்பும் வசதி சமூகம் தருவதாகும்.

சமூகம் உயிரைக் காப்பாற்றுகிறது . உள்ளம் வளம் பெறும் கலைகளையும் கற்பனைகளையும் வழங்குகிறது. ஆயுள் 1947-இல் 30 ஆண்டாக இருந்ததை 60 ஆண்டாக வாழ உதவுகிறது. குடிநீரை சுத்தம் செய்து அதனால் வரும் வியாதிகளினின்றும் காப்பாற்றுகிறது . நிலத்தில் மண்வெட்டி எடுத்து வேலை செய்தவனுக்கு ஆலையில் வேலை தருகிறது. Pick Pocketடே பரம்பரையாகப் பழகி இந்தியா முழுவதும் பரவிய பரம்பரையை நாணயமான மக்களாக மாற்ற நெசவாலையை ஏற்படுத்துகிறது50 மைல் பிரயாணம்

# சமூகம் — தாய்

செய்தறியாத மக்களுக்கு 5000 மைல் பிரயாணம் செய்யும் வாய்ப்பை அளிக்கிறது. கலவரங்களில் மனிதன் மிருகமாக நடந்து ஒரு கோடி பேர் ஊரை விட்டுப் போய் அவதியுற்ற பொழுது மனிதனுடைய உண்மை நிலையை நாம் அறிய முடிந்தது. அவர்கள் மீண்டும் வாழ்வு பெற சர்க்கார் செய்த பேருதவி இன்று எந்தப் பகுதியிலும் (அவர்கள் தங்கிய இடங்களில்) அவர்களே அதிக வசதி பெற்றவர் என்ற நிலையை அடைய உதவி செய்தது சமூகம். சமூகத்திற்கு சக்தியுண்டு. அதை நமக்குத் தருகிறது. கேட்காமலும் தருகிறது. சமூகம் படைக்கும் திறனுடையது. மனிதன் படைக்க முடியாததைப் படைத்து அவனுக்குப் படைக்கிறது. தாயாகவும், தந்தையாகவும், ஆசானாகவும், குருவாகவும், நண்பனாகவும், உறவினனாகவும், தெய்வமாகவும் எல்லாமாகவுமாக சமூகம் மனிதனுக்கு செயல்படுகிறது. மனிதனை மேதையாக்குவது சமூகம். சமூகம் உலக அனுபவங்களையும், அறிவுக் களஞ்சியங்களையும் திரட்டி வைத்துள்ளது. கல்லூரிகள் மாணவர்கட்கு அதன் ஒரு பகுதியைத் தருகின்றன. முழுவதையும் தரும் அமைப்பு கல்லூரி யில் அனைவருக்கும் பொதுவான பாட திட்டத்தையே ஏற்க முடியும். மேதை என்பது தனி ஒருவன் தன் திறமையின் திண்மையால் உச்சகட்ட உயர்வு பெறுவது. அந்த அமைப்புக்கு கல்லூரி இடம் தராது. புதியதாக வந்த Web courses-களில் அதற்கு கல்லூரிகளை விட அதிக சந்தர்ப்பம் உண்டு. புதிய Genius மேதைகளை உற்பத்தி செய்யும்படி அமைக்க முடியும் என்றாலும் ஜனத்தொகையில் பாதி பேர் எதையும் பெறாமலிருக்கும் பொழுது முதன்மையாக அதையே கவனிக்க வேண்டும் கல்வி முறையின் நுணுக்கங்கள் ஏராளம் சமூகம் முதல் நிலையிலிருந்து முடிவு வரையுள்ள எல்லா சிறப்பையும் பெற்றுள்ளது. பெற முன் வருபவர் பெறலாம் என்பதே நிலை. அது போல் ஒரு நூற்றாண்டில் மேதைகளாக உருவானவர் 100 பேரில்லை. 20-ஆம் நூற்றாண்டில் உலகம் கண்ட மேதைகளை விரல் விட்டு எண்ணி விடலாம். ஆனால் சமூகம் தனி மனிதனை மேதையாக்கவல்ல ஞானம் வழங்கும் தாய். கல்வியென்பதை கல்வி, கேள்வி எனவும் கேள்வி ஞானம் எனவும் குறிப்பிடுவார்கள். உலகின் அறிவு, அனுபவம், ஞானம், திறமை, திண்மை, சூட்சுமம், நுணுக்கம் ஆகியவை நமக்குத் தெரிந்த பல இடங்களிலும், தெரியாத ஏராளமான இடங்களிலும் சேகரம் செய்யப்பட்டுள்ளது. இன்று internet வந்து விட்டது. எவரும் அதை அதிகபட்சம் பயன்படுத்தலாம். எல்லாவற்றையும் அதன் மூலம் அனைவருக்கும் தரலாம். 100 ஆண்டில் சில மேதைகட்குப் பதிலாக இம்முறையால் ஆண்டிற்கு ஒரு மேதை உருவாகும். கல்வியின் எல்லா நுணுக்கங்களையும் அறிந்து, பெறுபவர் பெறும் அளவின் தரம் அறிந்து, கொடுக்கும் கருவியின் வீச்சையும் அறிந்து Web Course உருவாக்கப்பட்டால் ஆண்டுதோறும் அநேக மேதைகள் ஏற்படுவர் எந்த செயலுக்கும் குறைந்தபட்சம், அதிக பட்சம் உண்டு. இடைப்பட்ட நிலைகள் ஏராளம். 100 ஆண்டிற்கு முன் ஒரு பிரெஞ்சு சிந்தனையாளர் திருஷ்டியில் இந்த விஷயம் எழுந்தது. அவர் 3 கோடியே 70 லட்சம் மேதைகள் 4 துறைகளில் எழுவர் என்றார். அது அதிகபட்சமாக இருக்கும் மேதை என்பது யார்? எது மேதாவித்தனம்?

மனப்பாடம் செய்து பெறுவது அறிவு என்பது முதல் நிலையான ஒரு நிலை. அக்கறை, ஆர்வம் ஆசை எழுந்தால் கல் உடைப்பவன் சிற்பியாகிறான். படம் எழுதுபவன் ஓவியனாகிறான். வாயைத் திறந்தால் நாடோடிப் பாடல் வருபவன் கம்பன் போலக் கவிஞனாகவும், காளமேகம் போல புலவனாகவும் மாறுவான். ஆசை மனத்தின் வேகம். ஆத்மாவின் வேகம் ஆர்வம் எனப்படும். ஒருவனுடைய ஆத்மா ஒரு கலையில் ஆர்வம் கொண்டால் அவன் மேதையாவான். அவனை மேதையாக்குவது சமூகம் பெற்ற ஞானம். திறமை அதன் ஸ்தாபனங்கள். இன்று இந்த வாய்ப்பை Web உலகில் அனைவருக்கும் வழங்க முடியும். அதையும் இலவசமாகவும் வழங்க முடியும். அந்த பேறு பெறும் வழி பெரும் செல்வம் பெறும்

## சமூகம் — தாய்

வழியாகவுமாகும். கல்வியைப் பெற்ற சமூகம் கல்வியைத் தரும் — செல்வத்தைப் பெற்ற சமூகம் செல்வத்தைத் தரும். கல்வி உயிரின் செல்வம். செல்வம் மனமும், உயிரும் பெற்ற ஞானம். இவை அடிப்படையில் இணைந்துள்ளன. லக்னோவில் சட்டக்கல்லூரியும், கலைக்கல்லூரியும் இணைந்து செயல்பட்டனர். சட்டக்கல்லூரி தரும் பட்டம் L.L.B. கலைக்கல்லூரி தருவது M.A. இரண்டு பட்டங்களும் இரண்டாண்டில் பெறும் வசதியை இரு கல்லூரிகளும் இணைந்து ஏற்பாடு செய்தனர். அதே தத்துவப்படி கல்வியும், செல்வமும் சேர்ந்து பெறும் முறை Learning while earning or earning while learning ஆகும். மனிதன் மேதையாகலாம், பெரும் செல்வம் பெறலாம், இரண்டையும் சேர்த்துப் பெறலாம், ஏராளமாகவும் பெறலாம். லோகமாதாவுக்கு 4 அம்சம் உண்டு என்றார் பகவான். மஹேஸ்வரி, மகா காளி, மகா லட்சுமி, மகா சரஸ்வதி என்று அவற்றைக் குறிப்பிட்டார். அது போக மேலும் 8 அம்சங்களுண்டு. அவை சிருஷ்டியில் இன்னும் வெளிப்படவில்லை என்றார். அவை சிருஷ்டியில் வந்தால் மனிதனுக்கு அவற்றை வழங்குவது சமூகம். சமூகம் தாய், பாதுகாப்பு தரும், பண்பும் தரும், ஞானமும், கல்வியும், செல்வமும், நலமும் தவறாது வழங்கும் தாய் பெற்றோர், குறிப்பாக தாய் எந்த நேரமும் குழந்தைகள் நினைவாகவே இருப்பாள். பிள்ளைகளுக்கு பெற்றோர் நினைவு வராது. சிறுவனானாலும், இளைஞனானாலும், வளர்ந்த நிலையிலும் மனிதன் தன் எதிர்காலத்தை உருவாக்கியபடியிருப்பான். பெற்றோர் அவனைப் பெற்று ஆளாக்கினார். அது அவர்கள் கடமை. சுயநலமே இல்லாத பெற்றோர் பிள்ளைகளைச் சுதந்திரமாக வளர்த்தால், பிள்ளைகள் தங்கள் வாழ்வில் முன்னுக்கு வரும். பெற்றோர் நினைவே வராத பிள்ளைகள் சௌக்கியமாக சந்தோஷமாக வாழ்ந்தால் பெற்றோர் சுயநலத்தின் சுவடேயில்லாதவர் என்று அறியலாம். அவர்கட்குப் பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமை தங்குதடையின்றி தானே பூர்த்தியாகும். பிள்ளைகள் பெற்றோரிடம் பாசமாக இருந்தால் குடும்பம் பாசமான குடும்பம், நெடுநாள் பல தலைமுறைகளாகப் பண்பாக வாழ்ந்த குடும்பம் என அறியலாம். நாம் சமூகத்தை நினைவு கூர்வதில்லை என்பதே சமூகம் சுயநலமற்ற தாய் என்பதற்கு அடையாளம். எழுதப் படிக்கத் தெரியாத தாய் குழந்தைக்கு உடல் நலம் பேணுவாள். நற்பழக்கங்களையும் நற்பண்புகளையும் தருவாள். தாய் படித்தவளாக இருந்தால் அவள் குழந்தைக்கு செய்யக் கூடியது ஏராளம். தன்னை விட மகள், மகன் அதிகமாகப் படிக்க வேண்டும் என முயல்வாள். செய்து முடிப்பாள். தாயின் எண்ணம் தனயன் பெற்ற ஆசீர்வாதம். தாய் நினைப்பது தானே முடியும். தாயார் முயல்வது தவறாது. அறிவுள்ள தாய், நல்லெண்ணமும், பண்பும் பெற்று இலட்சியமான திறமையுடையவளானால், மகனை அரசனாகவே உயர்த்த முடியும்

### தாய்மை சிருஷ்டியின் திறமை

கென்னடி உடன் பிறந்தவர் 9 பேர். தகப்பனார் 9 மில்லியன் டாலர் சம்பாதித்தவுடன் சம்பாதிப்பதை நிறுத்தி விட்டு குழந்தைகளை முன்னுக்குக் கொண்டு வருவதில் வாழ்நாளை செலவிட்டார் "துறை எதுவானாலும், அங்கு முதன்மையாக வருவதே இலட்சியம்" என்பது அவர் கொள்கை. அது பெரு முயற்சி, அரிய முயற்சி, பெற்ற பலன் பெரியது. சமூகம் தாய். பெற்றோர் பிள்ளைகட்கு ஒரு சிறு சமூகம். நாட்டில் உள்ள அத்தனை பெருமைகளையும் தாய் மகளுக்கோ, மகனுக்கோ பெற்றுக் கொடுக்க முயன்றதில் வெற்றி பெற்றவர் சிலரே எனினும், அது சிறப்பான வெற்றி. ஒரு ஜில்லா தலைநகரில் 150 வக்கீல்கள் இருந்தனர். அவர்களுள் 50 பேருக்கு மேல் வக்கீல் குமாஸ்தா, கோயில் குருக்கள் மகன்கள். அக்குடும்பங்கள் பிள்ளைகளை படிக்க வைக்கப்பட்டது பெரும்பாடு. அது பாடுபட்டு மட்டும் சாதிக்க முடியாது. தாயன்பும் தகப்பன் பொறுப்பும்

## சமூகம் — தாய்

மகன் திறமையாக மலர தாய் தகப்பனுடன் ஊரும் உலகமும் சம்மதித்து ஆதரவு தர வேண்டும் . ஒரு இளைஞன் படித்து , பட்டம் பெற்று , வாழ்வில் நினைப்பதை , அதுவும் வசதியற்ற குடும்பங்களிலிருந்து வரும் இளைஞர் வாழ்வை கவனித்தால் ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்தின் ஆதரவும் , ஆமோதிப்பதும் எவ்வளவு அவசியம் எனத் தெரியும். ஏழை படித்தாலும். வேலைக்கு வந்தாலும் சமூகம் ஏற்க வேண்டும். அவனை ஏழையென ஏளனம் செய்தால் ஊரில் இருக்க முடியாது . ஊர் ஏற்பது கடினம் . உலகம் உவந்தேற்பது இறைவனின் அருள் . தாழ்ந்த ஜாதி மக்களில் பெரிய வேலைக்கு வந்தவர்கள் தங்கள் ஜாதியினரைச் சேர்ப்பதில்லை . எவர் சேர்த்தாலும் சேர்க்காவிட்டாலும் நம் ஜாதியில் உயர்ந்தவர் , மற்றவரை சேர்ப்பதேயில்லை. அதைக் கருதும் பொழுது சமூகத்தின் ஆதரவு, ஆசீர்வாதமாகும். சமூகத்தின் தாய்மை ஒருவகையில் இறைவனின் அருள் . வாழ்வில் social status சமூக அந்தஸ்தே முக்கியம் . முன்னுக்கு வந்தவர் வராதவரை ஆதரிக்க மாட்டார்கள் . இலட்சியம் எனக் கருதி தாழ்ந்த ஜாதிப்பெண்ணைத் திருமணம் செய்தவருக்கு குடும்பம் முழு ஆதரவு கொடுத்தது . திருமணம் ஆனபின் வீட்டில் சேர்க்கவில்லை . அவளுடனேயே போய் அவர் குடும்பம் நடத்த வேண்டியதாயிற்று . சமூகம் எளிதில் ஆதரவு தராது தருவது தாய்மை.

ஆபத்திலிருந்து காப்பாற்றுவது அவசியம். ஆனால் அது ஆரம்பம். சமூகத்தில் வாழத்தகுதியற்றவர், வசதி பெறாதவர், வசதியிருந்தும் அனுபவிக்க முடியாதவர், தனக்கு வருபவற்றை பிறர் அனுபவிப்பது கண்டும் சும்மா இருப்பவர்கள் ஏராளம் . இதைக் கடந்து மேல் மட்டத்தில் பெரும் திறமை . பெரிய நல்ல குணங்களுள் இலட்சியம் உள்ளவர் ஏராளமாக உண்டு . எதுவுமற்ற தாழ்ந்தவருக்கும் இது போன்று சில உயர்ந்தவை இருக்கும். அன்னை அவற்றிற்குப் பலன் தருவார் . அது அளவு கடந்த பெரியது . வாழ்வும் தரும். அது அடுத்தபடி. சமூகமும் ஏராளமாகத் தரும் . அது அதை விடச் சிறியது . அந்த மிகச் சிறியதே நமக்கு மிகப் பெரியதாகும். கூலி வேலை செய்தவன் 158 கல்லூரி, பள்ளிகளை நடத்துவது அது போன்றது. சமூகம் தருவது நம் சமூக அந்தஸ்திற்குரிய நல்லதாகும் . வாழ்வு தருவது நம் குண ராசிக்குரியதாகும் . அன்னை தருவது ஆன்மாவின் அம்சத்திற்குரியதாகும் . ஆன்மாவின் அம்சம் வேலைக்காரனுக்கோ , வேலைக்காரிக்கோ இருக்கும். வாழ்வின் அம்சம் கெட்ட பழக்கம் உள்ளவர்க்கிருக்கும். ஆன்மாவின் அம்சம் தேஜஸ் உள்ளவர்க்கிருக்கும்.

அன்னை ஒரு அன்பரை நாகலிங்க மலர் கொண்டு வரும்படிக் கேட்டார் . திருவுருமாற்றமும் கேட்டார். அவருக்கு அம்மலர்களை அன்று கொண்டு வந்தவனுக்கு தினசரி 1 ரூபாய் கூலி . அவன் பல மாதம் நாகலிங்க மலர் ஏராளமாகக் கொண்டு வந்தான் . பிறகு சிவந்த மலர் கிடைக்கவில்லையென வெண்மையான மலர் கொண்டு வந்தான். வெண்மையான மலர் சுயநலமற்ற சுபீட்சமாகும். இன்று அவன் தினமும் 1000 ரூபாய் சம்பாதிக்கிறான். பரம்பரையாக விஸ்வாசம் என்பதறியாத குடும்பத்தில் பிறந்தவன் என்பதால் அவனை அவன் முதலாளிக்கு எதிரி அணுகினார் . அவன் அப்பொழுது முதலாளியை விட்டு நின்று பல வருஷமாயிற்று . முதலாளிக்கு தொந்தரவு தர அவருக்கு எதிரி அவனை அணுகினார் . எதிர்பாராதவிதமாக அவன் அவர் கூறியதை செய்ய மறுத்து விட்டான் . மர மல்லிகை என்பது திருவுருமாற்றம். அம்மலர் கிடைக்காமல் ஒன்று (அல்லது) இரண்டு கிடைக்கும். பல நாள் அவன் கொண்டு வந்த மலர் அன்னைக்குப் போயிருக்கிறது . விஸ்வாசமற்ற பரம்பரையில் பிறந்த அவன் திருவுருமாறி விஸ்வாசத்துடன் பேசினான். பழைய முதலாளியின் எதிரியிடம் கூறினான். “என் முதலாளிக்கு துரோகம் செய்ய மாட்டேன். மேலும் அவருக்கு தொந்தரவு கொடுக்க உங்களை அனுமதிக்க மாட்டேன் ” என்றான்.

## சமூகம் — தாய்

இது அன்னை அவன் ஆத்மாவின் அம்சத்தை திருவுருமாற்றித் தந்தது . 55 வயதில் ஒரு அமெரிக்கர் அமெரிக்கன் மேனேஜ்மெண்ட் அசோசியேஷனில் ஒரு வைஸ் -பிரசிடண்ட்டாக இருந்தார். இதற்கு முன் இலண்டனில் ஒரு சர்வதேச மேனேஜ்மெண்ட் பத்திரிகைக்கு Copy Editor ஆசிரியராக இருந்தார்.15 ஆண்டு இலண்டன் அனுபவம் அமெரிக்காவில் இப்பெரிய பதவியைப் பெற்றுத் தந்தது . உயர் பதவி, அந்தஸ்து பெரியது, மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபொழுது நியூயார்க் வந்தார் . இவர் அவரை சந்திக்கப் பிரியப்பட்டார்.அனுமதி கிடைத்தது. 1985-இல் இலட்சம் டாலர் அமெரிக்காவிலும் பெரும் சம்பளம் கல்லூரி பேராசிரியர்கட்கு 40 ஆயிரம் என்றால் இவர் பெறுவது அதைப் போல் 2½ மடங்கு, அதிகம் படித்தவர். 6 வயதில் ஒரு கதை எழுதினார். அதிலிருந்து ஒரு புத்தகம் வெளியிட ஆவல் கொண்டார். 50 ஆண்டு வரை அது ஆவலாகவே இருந்தது. நிறைவேறவில்லை. Tom Peters என்பவர் In Search of Excellence என்ற புத்தகம் எழுதி 60 இலட்சம் பிரதிகள் விற்று பிரபலமானவர் நான் கூறும் அமெரிக்கர் தலைமையில் மாதந்தோறும் சொற்பொழிவுகள் நடக்கும் . அதற்கு அமெரிக்காவில் முன்னணி Management Consultants வருவார்கள். அவர்களில் Tom Peters ஒருவர். அன்று 1984-இல் அவருக்கு $ 400 பீஸ். புத்தகத்தால் பிரபலமான பின் ஒரே ஆண்டில் Tom Peters-க்கு பீஸ் ஒரு நாளைக்கு $ 20,000 என உயர்ந்தது . இவற்றையெல்லாம் கண்ணுறும் அன்பர் ஒரு புத்தகம் வெளியிடும் ஆவல் நிறைவேறவில்லை என்பதைக் கண்டு வருத்தப்பட்டார். வாழ்வில் பெரும் அனுபவப்பட்டவர். இவர் அன்பரில்லை. வாழ்வு இவருக்கு ஒரு பரிசு தர முடிவு செய்தது. நம் சொஸைட்டி அன்பருடன் இணைந்து ஒரு நூல் எழுதினார் . பிரஞ்சு, ஜெர்மன், டச், ஜப்பான், இத்தாலியன், ஸ்பானிஷ் என 7 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பிரசுரமாயிற்று . அமெரிக்காவில் Best Seller எனப் பெயர் பெறும் அளவுக்கு பிரதிகள் விற்றன . அதைத் தொடர்ந்து இவர் வேறு 3 புத்தகங்கள் எழுதினார்.

> சமூகம் தாய், அவள் கொடுப்பது ஏராளம்
> அதுவும் ஏழை மக்கட்கு வழங்குவது வரம்
> அதிர்ஷ்டமான காலங்களில் அதிகமாகப் பெறுவது
> ஏற்கனவே வசதியானவர்களே

இந்தியப் பணக்காரர்கள் சுதந்திரம் வந்தபின் பெரும் பணம் பெற்றனர்
சமூகம் அவர்கட்கு தருவது இது

சமூகம் என்று ஒன்று இன்று இல்லாவிட்டால், நாம் பேச்சிழந்து ஊமையாகி, செயலிழந்து நடைப்பிணமாகி விடுவோம் என்ற உண்மையை நாம் கருதுவதில்லை ஒரே சமூகத்தில் பிறந்த தாழ்ந்த மக்களும் உயர்ந்த மக்களும் எவ்வளவு வேறுபட்டுள்ளனர் எனக் காணும்பொழுது பெறுவதில் உள்ள வித்தியாசம் தெரிகிறது. ஒரு சமூதாயத்தினரை சமூகம் உயர்த்தியும் அடுத்தவரை தாழ்த்தியதும் உண்மையே . ஒதுக்கப்பட்டதும், தாழ்த்தப்பட்டதும் உள்ளதே

> ஆனால் உள்ளதை நாம் முழுவதும் பெறுவதில்லை
> சமூகம் தருவது நாம் பெறும்பொழுதும்

## சமூகம் — தாய்

அதைச் சரியாகப் புரிந்து கொள்வதில்லை
என்பதும் அடுத்த பெரிய உண்மை

**கீழ்க்கண்டவை நாம் முக்கியமாகக் கருத வேண்டியவை:—**

→ சில நாடுகள் உயர்ந்தும், மற்றவை தாழ்ந்தும் உள்ளன.
→ உயர்ந்த நாடுகளுக்கு உயர்ந்த சந்தர்ப்பங்கள் இருந்தன
→ பல நாடுகள் தாங்களே அரிய சந்தர்ப்பங்களை உற்பத்தி செய்து கொண்டன
→ நாடுகளைப் போலவே ஒரு நாட்டில் ஜாதி அல்லது class வித்தியாசம் உண்டு.
→ புதிய சந்தர்ப்பம் வரும்பொழுது வசதியுள்ளவனே அதிகமாகப் பெறுகிறான்
→ பெரியதும், சிறியதும் என்றும் உள்ள நிலை.
காலம் மாறினாலும், அது மாறுவதில்லை.
→ உலகத் தலைமை காலம் மாறும்பொழுது வெவ்வேறு நாடுகட்கு மாறுகிறது
→ முழுவதும் தவறானவன் முழுவதும் தொடர்ந்த பெருவெற்றி பெறுகிறான்
→ உயர்ந்ததும், தாழ்ந்ததும் மாறி மாறி வருகின்றன.
→ ஒரு விஷயத்தில் உயர்ந்தவன் அடுத்த விஷயத்தில் தாழ்ந்து விடுகிறான்
→ சமூகம் வற்றாத ஊற்றான தாய் தடம் மாறினால் காளியாக மனிதனை அழிக்கும்
→ சமூகத்துடன் ஒட்டி வாழ்ந்தால் 100 ஆண்டில் பெறுவதைப் 10 ஆண்டில் பெறலாம்.
→ இருண்டு, வறண்டிருந்த சமூகம், ஒளிமயமாகி, வளம் நிறைந்ததாக மாறி வருகிறது
→ சமூகமே இல்லையெனில் கல்வி என்பதே இருக்காது
→ சிறிய மனிதனுக்கு பெரிய அனுபவம் தர சமூகம் தன் வளர்ச்சியைப் பயன்படுத்துகிறது
→ ஏராளமான பணம் பெற சமூகம் எல்லா வாயில்களையும் திறந்து வருகிறது

சமூகம் தரும் வசதிகளில் மிகச் சிறியது பணம்
மன நிறைவு, ஆத்ம விளக்கம், அறிவின் சிறப்பு குடும்ப உயர்வு,
ஊரிலும் வீட்டிலும் தரும் பாதுகாப்பு பணத்தை விட உயர்ந்தவை

→ சமூகத்தை அதிகமாக அறிந்தவன், வாழ்வை முழுமையாக அனுபவிப்பான்
→ தாயாகவும், தகப்பனராகவும் செயல்படும் சமூகம் தாயும் தகப்பனாரும்
தர முடியாததெல்லாம் தரும்.
→ கடந்தகால பொக்கிஷங்களை காத்து வைத்திருந்து தருவது சமூகம்
→ எதிர்கால ஏற்றங்களை நிகழ்காலத்தில் உற்பத்தி செய்வது சமூகம்
→ சமூகம் பரந்து விரிந்துள்ளது, அது ஆழ்ந்து, உயர்ந்துள்ளது.
→ முழு சமூகத்தையும் பண்பு நிறைந்தவன் தன் குடும்பத்துள் காண்பான்
→ ஆன்ம விளக்கமுள்ளவன், அகத்துள் (மனதில்) அதையே காண்பான்.
→ மொழி, பண்பு, பழக்கம், நோக்கம், கல்வி, கருத்து, பதவி, பட்டம் ஆகியவற்றை நாம்
சமூகத்திலிருந்தே பெற்றோம்
→ சமூகம் தாய் என்பது உண்மை: உயர்ந்த மனிதன் உள்ளத்தால் சமூகத்திற்குத்

## சமூகம் — தாய்

### தாயாவான்.

சமூகம் அமுத சுரபி, காமதேனு, கற்பக விருக்ஷம், தாய், தகப்பன், குடும்பம், ஊர், உலகம் அனைத்துமாகும். இன்றைய சூழ்நிலையில் சமூகத்திற்கு ஒரு உதாரணம் கூற வேண்டுமானால் அது எலக்ட்ரிசிட்டி விளக்கு எரிவது, பேன் சுழல்வது , A.C., பிரிஜ் வேலை செய்வது , அடுப்பு எரிவது வீட்டில் காண்கிறோம் . எலக்ட்ரிசிட்டியில்லாவிட்டால் ஊர் இரவில் இருண்டு போகும் ரயில் ஓடுவதும் கார் ஸ்டார்ட் செய்வதும், போன் பேசுவதும், கம்ப்யூட்டர் செயல்படுவதும், ஆலைகள் இயங்குவதும் எலக்ட்ரிசிட்டியால் அது செய்யும் வேலைகளை சொல்லி முடியாது . ஆனால் ஷாக் அடிக்கும் . கையால் தொட்டுவிட்டால் உயிர் போகும் . மனிதனை வாழ வைப்பது சமூகம். சமூகம் தாய் என்றாலும் சமூகத்திற்குள்ள சக்தி தாய் போல மட்டும் செயல்படுவதில்லை, அது ஒரு சக்தி . நாம் அதை சரியாகப் பயன்படுத்தினால் தாயாக செயல்படும் . சமூகத்தை அறியாமல், நீச்சல் தெரியாதவன் நீரில் இறங்குவதைப் போலிறங்கினால் உயிர் போவதைப் போல் —அதை தவறாக அணுகினால் ஏராளமான அதன் சக்தி எதிராகச் செயல்படும் . உயிரும் போகும், நிலைமை மீறினால் சமூகம் ஊரையும் அழிக்கும் . பிரெஞ்சுப் புரட்சியில் சுமார் 10 ஆண்டுகள் சமூக சக்திகள் கட்டவிழ்ந்து terror பயங்கரம் நிலவியது . இந்து முஸ்லீம் கலவரத்திலும் இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் அது போன்று ஆபத்தான சூழ்நிலையை நாம் இந்நாட்டில் கண்டோம்

கடப்பாறை வாங்கிக் கொண்டிருந்தவனை கட்டியிழுத்துப் போய் காபினட் மந்திரியாக்கும் சக்தி சமூகத்திற்குண்டு. வன்னியர், M.A.,பட்டம் பெற்ற வன்னியர் என்ற காரணத்தால் பூவராகவன் மந்திரியானாலும் அதை செய்தது சமூகம் . தண்டோரா போட்ட தொண்டர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராகி, முதன் மந்திரியாகவும், அகில இந்தியா காங்கிரஸ் தலைவராகவுமானதும், இந்திய பிரதமரை நியமித்ததும் அவர் திறமையாலும் , நாணயத்தாலும் என்றாலும் , எப்படி சமூகம் அவரை ஒவ்வொரு கட்டத்திலும் ஆதரவு அளித்து உயர்த்தியது என்பதைக் கண்டால் , நமக்கு சமூகம் எப்படிப்பட்ட கடலென விளங்கும். சமூகம் செய்யும் பல பெரிய காரியங்களை தனி மனிதனோ , ஒரு ஸ்தாபனமோ செய்ய முடியாது. சர்க்கார் மூலம் சமூகம் ரோடு போடும், மின்சாரம் உற்பத்தி செய்து வினியோகம் செய்யும். அது போல் அளவிறந்த காரியங்களை சர்க்கார் மூலம் செய்யும். சமூகத்தின் அனுமதியின்றி சர்க்காராலும் இது போன்ற பெரிய காரியங்களை செய்ய முடியாது

ஒரு வகையில் சர்க்காரே பல காரியங்களில் சமூகமாகத் தென்பட்டாலும்
சமூகம் சர்க்காரை விடப் பெரியது அதிக சக்தியுள்ளது
எந்த சர்க்காரும் ஒரு சமூகத்தை பண்பை உற்பத்தி செய்யக்கட்டாயப்படுத்த முடியாது
சர்க்கார் மக்களை ஒரு மதத்தைத் தழுவக் கட்டாயப்படுத்தலாம்
ஆனால் மதத்தை இதுவரை உற்பத்தி செய்த சர்க்காரில்லை
நாட்டின் பண்பு, கலாச்சாரம், மதம், இலக்கியம், கலை, ஓவியம் போன்றவற்றை
உருவாக்குவது சமூகம்.

வாழ்வு விரிவடைந்தால் உரைநடை வளரும் . சமூகம் உயர்ந்து சிறப்படைந்த நிலையில் நெடுநாள் நிலைத்திருந்தால் காவியம் (Poetry) உற்பத்தியாகும். எலிசபெத் மகாராணியின் ஆட்சியில் ஆங்கில

## சமூகம் — தாய்

இலக்கியம் தழைத்து , ஷேக்ஸ்பியர் உற்பத்தியானதை இதற்கு உதாரணமாகக் கூறுவார்கள் . பிரெஞ்சு மொழி பிரபலமானதும், பிரெஞ்சு பாஷன் உலகம் முதன்மையானதாக ஏற்றதும், பிரெஞ்சு சாப்பாடு, டிரஸ் உலகெங்கும் பரவியதும் பிரெஞ்சு சமூகத்தால் தான்

## சமூகம் கலாச்சாரத்தின் தாய்

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்பது சமூக சக்தியின் முழுமையை எதிரான சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்டுவதாகும். இந்த சமூகத்தின் அடிக்கல்லாக (unit) விளங்குவது குடும்பம். அக்குடும்பத்தின் ஜீவனாக செயல்படுவது பெண் . பெண்மையின் உயிர்நாடி தூய்மை , தாய்மை, சிருஷ்டித்திறன், நேர்மை, நியாயம், நிர்ணயம். ஆணுக்கு இவ்வுயர்வுகள் எல்லாமிருக்கலாம் . ஆனால் அது மின்சாரம் விசிறியுள் நுழைந்தால் விசிறும். ஒளி எழாது. ஒளி எழவேண்டுமானால் மின்சாரம் விளக்குள் நுழைய வேண்டும். உயர்ந்த குணங்களை உலகம் பெற வேண்டுமானால் அவை பெண்மை வழியாக அடுத்த தலைமுறையை எட்ட வேண்டும்.

மூலம்: திரு.கர்மயோகி அவர்கள்

சொற்பொழிவாற்றியவர்: திரு.நாகராஜன், ராணிப்பேட்டை மையம்

சொற்பொழிவாற்றிய தேதி: **07.09.14**

***